உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகாசமாஜம்

# 28-ஆம் ஆண்டு நிறைவு விழா

4686. XVI E.23.
(6794)



# சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமைப் பேருரை

( ரீ. கந்தசாமிபிள்ளை )

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
சென்னை-

திருச்சிற்றம்பலம்.

சைவ சித்தாந்த மகாசமாச

# இளைஞர் மகாநாட்டுத் தலைமைப் பேருரை.

(சி. கந்தசாமி.)

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பல ரேம்பலித் திருக்க
என்னெடுங் கோயி னெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே

திருவிசைப்பா.

அன்பரீர்!

திருவருட்டுணை கொண்டு இவண் கூடியுள்ள இளைஞர் மகாநாட்டிற்குத் தலைமைதாங்க எளியேனைப் பணித்த நுங்கள் பேரன்பிற்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். தலைமை தாங்கற்கேற்ற பல சிறப்புகளுள் ஒன்றேனும் வாய்க்கப் பெறாத யான் இப்பணியை மேற்கொள்ள மிகவும் அஞ்சினே னெனினும், முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன் திருவருளும் தங்கள் பேரன்பும் துணைநிற்ப, ஒருவாறு ஆற்றலொண்ணும் எனும் துணிவு பிறப்ப முன்வந்து சில சொல்ல எண்ணுகின்றேன். அன்பர்கள் பொறுத்தருள்வீர்களாக.

இந்நாளிலே, உலகத்தின் பல பகுதிகளிலும் பலவகையான கூட்டங்கள் நடைபெறுகின்றன. இவைகட்கு அடிப்படையாக உள்ளவை, அவைகளைச் சார்ந்த மக்களிடையே காணப்பெறும் சில பொதுத் தன்மைகளேயாகும். சிலர் நாட்டின் ஒற்றுமை கருதிக் கூடுவர், சிலர் மரபு ஒற்றுமை கருதுவர், சிலர் தாங்கள் செய்யும் தொழில் ஒற்றுமை கருதிச் சேர்வர். இங்கு கூடியுள்ள நாமோ, எக்காலத்தும் மாறாது நின்று மக்களுக்கு இம்மையும் மறுமையும் நல்வாழ் வளிக்கும் சைவ சித்தாந்தம் என்னும் சமயத்தையும் தத்துவத்தையும் உடைமையாகக் கொண்டுள்ளோம் என்னும் உணர்வினாலும் ஒற்றுமையினாலும் ஈண்டு ஒன்றுகூடி, நமது சமயத்திற்கும், அதைச் சார்ந்தார்க்கும், உலகுக்கும் ஆவனவாற்றித் தொண்டியற்றும் வழிகளை எண்ணித் துணிய முன் வந்திருக்கின்றோம். இறைவன் திருவருளும் நம்முயற்சியும் ஒன்றுக.

இளைஞர் இயக்கங்கள் பல பகுதிகளில் பலவகையாகத் தோன்றியுள்ள வெனினும், அவற்றின் கொள்கைகள் இரு பெரும் பிரிவினுள் அடங்குவனவாகும். ஒன்று:—மக்களால் இதுவரை கையாளப் பெற்றுவந்த எல்லாக் கொள்கைகளும் முன்னேற்றத்திற்கு தகுதியற்றன வென்பதும் உலகம் உயர்வடைய வேண்டின் பழங்கொள்கைகளாய மாளிகைகளை இடித்துத் தகர்த்துப் பொடிசெய்து, இப்பொழுதைய அறிவு நிலைக்கேற்பப் புதுக் கொள்கைகளைப் பல துறைகளிலும் பரப்பி நிலைபெறச் செய்யவேண்டு மென்பதுமாகும். ஏனையது:—சில நூற்றாண்டுகளாகத்தான் உலகம் தடுமாற்றமடைந்துள்ளது; இக்காலத்திய அல்லல்கள் யாவும் அத்தடுமாற்றத்தின் விளைவேயாகும்; பண்டை நாட்களில் உலகமும் மக்களும் இருந்த நிலையை நன்கு தெரிந்து அக்காலத்து நிலவிய கொள்கைகளை மீண்டும் நிலைபெறச் செய்யின் நலமுறற்கேதுவாகு மென்பது. இத்தகைய மாறுபாட்டிற்குப் பல காரணங்களுண்டு, அவற்றை ஈண்டு விரிக்க வேண்டா.

நமது இயக்கமோ, முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளைத் தலைவனாகக் கொண்டுள்ளது; அத்தலைவனே பின்னைப் புதுமைக்கும் புதுமையாம் பெற்றியன். அன்னவன் நிலை அன்னதாகலின் அவனடிபோற்றும் நாமும் பழையன விடாது புதியன போற்றும் கடமை உடையோமாவோம். எம் இயக்கமும நற்பலனடைதற்குத் தெள்ளிய நோக்கமும், நடைமுறைகளும் இன்றியமையாததாகலின் நாமும் நமது நோக்கத்தையும் நடைமுறைகளையும் ஒருவாறு ஆராய்ந்து தெளிய முயல்வோம்.

சைவ இளைஞர்கள் என்ற முறையில் நமக்கு உரிமையாகக் கிடைத்துள்ள உடைமைகளுட் சிலவற்றை ஆராய்ந்து, அதன் வழி நமது நோக்கம் எத்தகையதாகவிருக்க வேண்டுமென்று தெரிந்து, அம்முறையில் நமது கடமைகளுட் சிலவற்றையும் கருதி, அவற்றை யாற்றும் நடைமுறைகளை உறுதி செய்வதே இக்கூட்டத்தின் பயனாகும். யானும் முகவுரையாக, நமது உடைமைகளுட் சிலவற்றைப் பற்றியும் கடமைகளுட் சிலவற்றைப் பற்றியும் என் சிற்றறிவிற்கேற்ப கூற முன்வருகிறேன். யான் இங்கு கூறப் புகுவனயாவும் சைவ இளைஞர்கள் என்ற நமது நிலையிலேயேயாகலின் ஏனைய நிலையில் நமக்குள்ள உரிமை, உடைமை, கடமைகளை மறந்ததாகக் கருதமாட்டீர்கள் என எண்ணுகின்றேன். நமது உடைமையாகக் கருதி இன்று இங்கு கூறப்புகுவனவெல்லாம், நமது சமயமும், தத்துவமுமாகிய சைவ சித்தாந்தத்தைப் பற்றியும், அதினின்றும் பிரிக்கவொண்ணா வியைபுடைய செந்தமிழைப் பற்றியும், நமது சமய உண்மைகளும், முன்னோர் உள்ளப் பாங்கும் அவர் கலைத்திறனும் அன்னவர் கைவன்மையும் பருவுடற்கொண்டு நின்றாலன்ன நிலைபெற்று ஒளிபரப்பி நம் உயிர்ப் பண்புகள் இறந்துபடாது குற்றுயிர் கொண்டேனும் நிற்பதற்குதவும் திருக்கோயில்களைப் பற்றியுமேயாகும். கடமைகளும் அவை குறித்தே.

மக்கள், அறிவுவாய்க்கப்பெற்ற மிக்க பழங்காலந் தொட்டே, யாதேனும் ஒருவகையில் தம்மாற்றலுக்கு மேற்

பட்ட தொன்றுளது என்ற உணர்ச்சியால், தாம் மேற்பட்ட தாகக் கருதும் ஒன்றை அவ்வக்கால நிலைக்கும், மன நிலைக்கும் ஏற்ப வணங்கி வந்திருக்கிறார்கள். எந்த நிலையிலும், தங்கள் உடலைப் போற்றுதலில் கருத்துடையவர்களானமையின், தங்கள் உடலுக்குத் தீங்கிழைக்கவல்ல பொருள்களிடத்து ஒருவகையான அச்சம் பிறந்து அதன் பயனாக அவற்றை வணங்கத் தொடங்கினர். இதுவே இறைவன் அச்சவுருவின னாக மக்கள்பால் அருள் செலுத்திய நிலையாகும். இந்நிலையில் பலவகைப் பிரிவுகளும் வழிபாட்டு முறைகளுமுண்டு. சமய வளர்ச்சியில் இந்நிலையின் எல்லைக் கல்லாக நமது நாட்டில் நாக வணக்கத்தைக் கூறலாம். பின்னர் பல மாறுதல்களடைந்து இறைவனை அன்புருவாகப் போற்றுவாராயினர். இதன் விரிவு களும் பிரிவுகளும் பல; அவற்றைச் சுருக்கிக் கூறுதற்கேனும் இவண் இடமில்லை. இந்நிலையின் எல்லைக் கல்லாக நமது மர வணக்கத்தைக் கூறலாம். பின்னர் இது விரிந்து இறைவனை அருளுருவனாக வணங்கும் நிலையில் நின்றது. இந்த நிலைகள் பலவும் பல்லாயிரவாண்டுகளாக நமது நாட்டில் நின்று மறைந்து, கூடி விரிந்து வருவனவாயின.

நமது சைவமோ இறைவனை அருளுருவினனாக வழிபடும் பழுத்த நிலையிலுள்ளது. பல நிலைகளிலும் இந்நாடு ஒவ் வொருகாலம் நின்றிருந்தமையால், ஒரு நிலை மறைந்து மற்றொரு நிலை தோன்றுங்காலத்து, மறைந்த நிலையின் சில பண்புகள் உருக்கரந்து, புதிய நிலையில் கலந்துகொள்வதுமுண்டு. முடிந்த நிலையாகி நின்ற அருட்கனி பழுத்த நமது சைவசமயத் திலும் இறைவனை உருவகப்படுத்திப் புகழுங்கால், அச்சம், அன்பு முதலிய சமயநிலைகளின் எச்சங்களும் ஓர் ஓர் வழி உருக்கரந்து நிலவுவதைக் காணலாம். சமயத்தொடர்பான பழ வரலாறுகளிலும், வழிபாட்டு முறைகளிலும் இக்கலவை நேர்ந் துள்ளது. சமயவுண்மைகளை உருவகப்படுத்தி மறைபொரு ளாகத் தெரிவித்த நமது சைவப் பெரியார்களும் உருவக முறையில் சில அருள் சிறவாப் பழங்கதைகளைப் பயன்

படுத்தியுமிருக்கிறார்கள். இந்நுட்பங்களை அறிந்து கோடும் அமைதியில்லாத சிலர் உண்மை தெரிந்துகொள்ள வியலாது சிற்சில உருவகக் கதைகளைக்கொண்டு தடுமாற்றமுற்று பிறழ வுணர்வாராயினர். நமது சைவ இளைஞர்கள், இத்தகைய மாறு பாட்டுணர்ச்சிக்கிடனின்றி தக்க வழியிலாய்ந்து உண்மையைத் தேர்ந்து வுலகிற் கறிவுறுத்த வேண்டுவது ஒரு கடமையாகும். நமது சைவ சமயமோ கற்பகச்சோலை யொப்பத்தன்னைச் சார்ந்த பலதிறப்பட்ட ஆன்மாக்களுக்கும் அவரவர் தகுதிக் கேற்ப பயன்படும் பெற்றிவாய்ந்தது. பலபல வகையான செடி கொடி வகைகளும், தளிரால், இலையால், அரும்பால், மலரால், காயால், கனியால், இன்னும் பலவகைகளால் பயன் படும் மரவகைகளையுமுடையது. இப்பலவகைச் செடிகொடி மரங்களும் ஒன்றோடொன்று இடைமிடைந்து நெருங்கி ஒன்றி லொன்று வேறு பிரித்து அறியவியலாவண்ணம் வளர்ந் துள்ளன. பல நிலைகளையும் நன்குணர்ந்தோரே இதனை ஆராய வல்லார். பயன் பெறுதற்கு எத்துணை எளியருமுரியரேயாவர். ஆவலும் அன்புமே பயனடைதற்கு வேண்டியபண்புகளாகும். ஆராய்ச்சி செய்வோர்க்கு இவ்விரண்டோடு அளவிலாச்சமய வறிவும் இன்றியமையாததல்லவா? இவை வாய்க்கப்பெறார் சைவச்சூழலுள் புகுந்து சுழன்று வறிதே திரும்புவதன்றி என்செயவல்லார்? வாய்வந்தவாறு பிதற்றுவது இயற்கையே. சைவ இளைஞர்களே! நீவிர் ஆவலுந்த, அன்பு ஈர்ப்ப, அறிவு துணைகாட்ட, நமது கற்பகக்காவுட் சென்று, அங்கு காணப் பெறும் பலவகை மரஞ் செடிகொடிகளையும் வகைக்கொன்றாகக் கொணர்ந்து, எளிய அறிவினரும் கண்டுகளித்துப் பய னுறும் வண்ணம் தனித்தனியே பயிர்செய்து, இந்நிலவுலகில் ஓர் சைவச் சோலை தோற்றுவிப்பீர்களாயின், சமயவாராய்ச்சி செய்யும் இந்நிலவுலகம் அனைத்தும் ஓடோடியும் வந்து உங்கள் சோலையின் தளிர்கண்டு மகிழ்ந்தும், மலர் மோந்து நெகிழ்ந்தும் தென்றல்வீச அயர்ந்தும், குயில்கூவ உருகியும், கனியார்ந்து மெய்ம்மறந்தும் பேரின்புறுவர். நீவிரும் இறைவன் பணியில் ஒருசிறிதாற்றினேம் என்னும் மகிழ்வெய்தலாம்.

நமது சமய தத்துவமாகிய சித்தாந்தமோ முதிர்ந்த நிலையுடைய தொன்றாகும். நமது பெரியோர் இவ்வுலகந் தோன்றி நின்று நிலவுவதைக் கண்டு இவ்வுலகுக்கும் அதன் கண் வாழுந் தமக்கும் தலைவன் ஒருவன் உளன் என்பதை யோர்ந்து அத்தலைவனைப் பதியெனவும், உயிர்த்தொகுதியைப் பசுவெனவும், இவ்விரண்டிற்கும் புறம்பாயுள்ள உலகமுதலிய தோற்றங்களைப் பாசமெனவும் வழங்குவாராயினர். எனவே சித்தாந்தத்தின் முதற்பொருள்கள் பதி, பசு, பாசம், என்னும் மூன்றுமாகும். இவையெக்காலத்தும் நிலை நிற்பன. ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியவையல்ல. பதியென்பது எல்லாம் வல்ல இறைவனைக் குறிக்குஞ்சொல். பசுவென்பது உயிர்த்தொகுதியைக் குறிக்குஞ்சொல். பசுக்கள் எண்ணிறந்தன; சிறு அறிவும் சிறு தொழிலு முடையன. இறைவனால் உணர்த்தப்பெறின் உணருந்தன்மையன. இயற்கையிலேயே பதியோடும் பாசத்தோடும் தொடர்புடையன. முன்னைய தொடர்பால் நல்வினையும், பின்னையதால் தீவினையும் இத்தொடர்புகளின் ஆற்றலின் ஏற்றத்தாழ்வால் நல்வினை தீவினைகளின் குறைவு மிகுதியும் இயற்கையிலேயே பசுக்களுக்கு ஏற்பட்டுள்ளன. பசு பளிங்குபோலச் சார்ந்த தன் வண்ணமாக நிற்கும். பாசமென்பது ஆன்மாக்கள் இறைவனை அறியவொட்டாது மறைத்து நிற்கும் ஒரு பிணியாகும். செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களோடு கலந்துள்ளது. பதியின் அருள் நோக்கால் ஆன்மாக்களைப் பிணிக்கும் தன் ஆற்றல் குறையுந் தன்மையுடையது. இது ஆணவம், கன்மம், மாயை, என்னும் முத்திறத்தது. இவற்றை மும்மலமென்று கூறுவர். இவற்றுள் மாயை உயிர்கள் வாழுதற்கு இடமாக அமைந்துளது. இதை முப்பத்தாறு பிரிவுகளாக ஒருவகையில் பிரித்துள்ளார்கள். இப்பிரிவுகளுக்குத் தத்துவங்களென்று பெயர். அவை மண் முதல் ஒலிவரையிலாகும். இன்னும் பலவகைப் பிரிவுகளும் உண்டு. மக்களது அறிவும் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டது. அவை பாசத் தொடர்பான நிலைகளையும் இயக்கங்களையும் அறிந்துகொள்ளும் அறிவாகிய பாசஞானம் என்ப

தும், உயிரின் தன்மைகளை, அறிந்துகொள்ளும் பசு ஞானம் என்பதும், இறைவன் நிலையையறிந்து உய்யும் பதிஞானம் என்பதுமாகும். ஒவ்வொரு ஞானமும் அவ்வவற்றோடு ஒன்றி உணர்ந்த நிலையிலேதான் முழுப்பயன் அளிக்க வல்லதாகும். பாசப் பிணிப்புண்டு கிடக்கும் உயிர்த்தொகுதிகள் ஈடேறும் வண்ணம் இறைவன் தனது சக்தியினால் ஆற்றுகின்ற செயல்,. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என ஐந்து வகைப்படும். இவற்றையே இறைவனது ஐந்தொழில் எனக் கூறுவார்கள். இறைவன் கூத்தப் பெருமானாக எழுந்தருளியுள்ள நிலை இவ்வைந்தொழிலைக் காட்டுவதேயாகும். ஆன்மாக்கள் பெறவேண்டுவது இறைவனது திருவடிப் பேறாகிய பேரின்பமே யென்பது நமது தத்துவ முடிவாகும். அப்பேற்றினை யடைதற்கு உயிர்கள் ஆற்ற வேண்டிய பலபடியான செயல்களுள. அவற்றை ஒருவகையில் பத்துப் படிகளாகப் பிரித்துக் கூறுவதுண்டு. அவை மண் முதல் ஒலி ஈறாகவுள்ள தத்துவங்களுடைய நிலை இயக்கங்களை அறியும் தத்துவ ரூபம், அவை யெல்லாம் அறிவில்லாதனவென அறியும் தத்துவ தரிசனம், இறைவன் அருளினாலே தத்துவங்கள் தமக்குப் புறம்பாயவையென அறிந்து நீங்கும் தத்துவ சுத்தி முதலாக, ஆன்ம நிலையும் இறை நிலையுமுணர்ந்து இறைவனோடு இரண்டற நின்று பேரின்பம் துய்த்தல் வரையிலும் ஆகும். பேரன்பர்களே, நமது தத்துவம் எத்தகையதென ஒருவாறு மேற்பார்வையாகப் பார்த்தோம். இளைஞர்களாகிய நாம் எந்த முறையில் சித்தாந்தத்திற்குத் தொண்டு செய்வதென்பதை இப்பொழுது ஆராய விரும்புகிறேன். நாமோ இளைஞர்; நமது தத்துவமோ முதிர்ந்த நிலையிலுள்ளது. சிந்தையுஞ் செயலும் அற்ற நிலையிலன்றோ நமது உயிர்கள் அடையவேண்டிய முடிவாகிய பேரின்பத்தின் புறவெல்லையின் சேயதோர் கோடியையேனும் அணுகக் கூடும். இப்போது என் செய்வது என்ற மனத் தளர்ச்சி நமக்கு ஏற்படாவண்ணம் நமது தத்துவ முறை அழகான வரிசையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்களாகிய நாம் மேற்கூறிய பத்து வகையான

செயல்களில் முதலாவதான தத்துவ நிலை இயக்கங்களை அறியத் தொடங்கி அவ்வறிவின் பயனை நம்மவர் அனைவரும் நுகருமாறு நமது தாய் மொழியிலேயே வெளியிடலாம். இவ்வாறு தத்துவ அறிவைப் பெறுவதற்கு இதுகாறும் மண்முதல் ஒலிஈறான தத்துவங்களை மேல்நாட்டார் அறிந்திருக்கின்ற முறைகளை யெல்லாந் திரட்டி நீவிரும் புதுவதாக ஆராய்ச்சி செய்து அவற்றையெல்லாம் நம் மொழியிலே ஆக்கித்தரல் வேண்டும். இத்தகைய தொண்டின் பயனாக நாம் மண், நீர், தீ, வளி, கால் முதலிய பல தத்துவங்களின் நிலைகளையும், இயக்கங் களையும் நன்குணர்ந்து அவற்றின் பலவகையான கூட்டங் களினாலும் பிரிவுகளினாலும், உலகம் வியக்கத்தக்க பலபல புதுமைகளைத் தேர்ந்து உலகிற்கு பேருதவி செய்யலாம். உல கத்தின் பல பாகங்களிலும், சிலபெரியார்கள் தோன்றி, நீராவி, மின்பொறி, ஒலிஅலை, வளியியக்கம் முதலியவற்றின் நுண்மை களை நன்குணர்ந்து, அவற்றை மக்களுக்குப் பயனளிக்க வல்ல முறைகளில் பொருத்தி, யாவரும் கண்டு வியந்தின்புறத் தக்க செயல்கள் பலவாற்றியிருத்தல் நாம் அனைவரும் உணர்ந்ததே யாகும். இப்பெரியோரையெல்லாம் ஆங்காங்கு நிலவிவரும் சமயங்கள் தமதுசமயத்துக்குப்புறம்பாகவே கருதிவருகின்றன. நமது தத்துவ முறையிலோவென்னில், இவர்கள் இறைவனை அடையவிருக்கும் பத்து நிலைகளுள், முதல் நிலையினராகக் கருதப்படுவார்களல்லரா? உலகெங்கும் அறிவு நூல்களும் சமய நூல்களும் ஒன்றோடொன்று மாறுபட்டுக்கலாம் விளைத்து இன் னல்படவும், நமது சித்தாந்தமோ, இக்காலத்துப் பலரும் போற்றும் அறிவுநூற் கொள்கைகளை ஆராய்ச்சி செய்து தெளிதலையே சமயத்தின் முடிவான பேரின்பத்துக்கு அடிப் படையாக வகுத்திருப்பது பெரிதும் போற்றத் தக்கதே யாகும். இத்தகைய சீர்மலிந்த கொள்கைகளை வேறு எங்கும் காணவியலாதென்று உறுதியாகக் கூறலாகும். அன்பர்களே! நமது சித்தாந்தத்தின் உயர்வை பரந்த உலகம் எக்காலத்து தெரிந்து போற்றப் போகின்றது? அதனை உங்கள் உரிமை யாகக்கொண்ட நீவிர் அவ்வுண்மைகளை உலகிற் பரவச்செய்யும்

முறையில் எவ்வகைத்தொண்டு ஆற்றவல்லீர்? "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனக் கூறிய பெரியார் உங்கள் முன்னோரல்லரா? நீவிர் இதுகாறும் சித்தாந்தத் தேன் பருகி இன்புற்றிலீர் போலும்! அதுகுறித்து வாளா விருக்கின்றீரோ? காலம் தாழ்க்காது நாம் அனைவரும் ஒன்றுகூடி சித்தாந்த உண்மைகளைத் தக்க ஆசிரியர்பால் கேட்டு, கால நிலைக்கேற்ப ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். மரபாகக் கேட்கப் பெற்றுவரும் சில சிறந்த உண்மைகள் போற்றுவாரின்றி மறையும் நிலையில் இருக்கின்றன. இவ்வுண்மைகளை அனைவரும் அறியும் வண்ணம் தெளிவாக வெளியிடுவதினால் சிறந்த பயனெய்தலாம் என்பதில் ஐயமேயில்லை. இவ்வுண்மைகள் மறைந்து கிடக்கும் இடங்களை நாடித் தெரிந்துகொள்வதே நம்முடைய முதற்கடமையாக நமது இளைஞர்களிற் சிலர் மேற்கொள்ளவேண்டும். இதனை மேற்கொள்ள வல்லார் நம்மவர்களில் மாணவர்களே யாவார். அவர்களுள்ளும், பல்கலைக்கழகங்களில் தத்துவ பாடங்களைச் சிறப்பாகப் பயின்றவர்களே பெரிதும் தகுதியுடையாராவார்.

நமது சித்தாந்தக் கொள்கைகளில் ஊறி வளர்ந்த பெரியோர்கள் உலக வாழ்க்கையை எவ்வாறு நடத்தி வந்தார்களென்பதையும், எவ்வாறு இருக்கவேண்டும் என்றெண்ணி வந்தார்களென்பதையும், அதனாற் பெற்ற, பெறுதற்காய பலன்களையும் நாம் கருதவேண்டியது இன்றியமையாததாகும். இத்தகைய ஆராய்ச்சியில் நமது உலகவாழ்வு மேம்படுதற்காய பல உண்மைகளும் வெளிவருதல் கூடும். எத்தகைய சீரிய அரசியல் முறைகளும், வாழ்க்கை முறைகளும் அதனை நடத்துவார்களது உள்ளப் பான்மையின் உயர்வினாலேயன்றி, வேறெவ்வாற்றானும் சிறவாதென்பது உலகறிந்த உண்மையாகும். அரசியல் முறையைத்திருத்த முன் வருவோரினும் மக்கள் உள்ளப் பான்மையைத் திருத்த முன் வருவோர்களே பெரியோராவர். அவ்வாறு உள்ளப் பான்மையைத் திருத்துவதற்கு உலகின் நன்மை தீமைகளையும் அவற்றின் காரணங்களையும் கண்டு தேர்தலும் தேர்ந்த பெரியார்களது நோக்கங்களைத் துணைக் கோடலும் வேண்டற்பாலனவாகும்.

இம்முயற்சியிலும் நமது இளைஞர்கள் ஈடுபட்டுப்பெரியோர் நோக்கங்களை உலக வாழ்வில் பெரிதும் பரவச் செய்ய வேண்டும். நம்முடைய பெரியோர்கள் நன்மை தரத்தக்கதெனத் தேர்ந்த வாழ்க்கை முறை பலவற்றுள் எடுத்துக் காட்டாக ஈண்டு ஒன்று கூறுகின்றேன். ஒரு பெரியார் தனக்கு உலகத்தே தோன்றும் பொருள்களில் உளதாய வெறுப்பு விருப்புக்களை உற்று நோக்கினர். தாம் வெறுப்பாகக் கொண்டவெல்லாம் தன்னுடைய நலத்திற்கு தீங்கு பயப்பனவாகவும் விருப்பாகக் கொண்டவெல்லாம் நன்மை பயப்பனவாகவும் தோன்றின. தன்னோடு தொடர்பு படுத்தாமல், முன் வெறுப்பு விருப்பாயிருந்த பொருள்களைத் தனித்தனி ஆராய்ச்சி செய்த காலத்து, விருப்பு வெறுப்புக்கேற்ற தன்மைகள் ஒன்றும் புலப்படவில்லை. பின்னர் எல்லாப் பொருளிலும் ஒரே தன்மையாகக்கலந்துள்ள இறைவனோடு அப்பொருள்களைத் தொடர்பு படுத்திப் பார்க்குங்கால் எல்லாப் பொருள்களுமே இன்ப உருவினவாகவும் அருள் பயப்பனவாகவும் தோன்றின. உடனே அவர் எல்லாப் பொருள்கள் மாட்டும் தம்மோடுடைய தொடர்பை மறந்து இறைவனோடுடைய தொடர்பை எண்ணி நடத்தும் வாழ்வே சிறந்ததெனக் கொண்டு

"தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்திலும் தில்லை மன்றிலும் நடம்
ஆடும் அம்பலவாணா" என்று அவ்வாழ்வைக் குறிப்பாகப் போற்றுவாராயினர்.

"கண்ணிற் காண்பது எவ்வுலகினும் காண்பன
எல்லாம் நீயேயாகி நின்றதோர் நிலையே"

என்றும் அவ்வாழ்க்கையை வற்புறுத்தலாயினர். எந்நிலையிலும் வாழ்வு இன்புறுதற்கு இத்தகைய கொள்கையை மேற்கொள்ளல் சால்புடைத்தென்பது வாழ்க்கையின் பல நிலைகளிலும் பொருத்திக் காண்பார்க்கு நன்கு விளங்குவதாகும் இவ்வாறு காணப் பெறும் பல வாழ்க்கை உண்மைகளையுட

தெரிந்து, வெளியிட்டுப் பலரும் போற்றச் செய்து, அதன்வழி மக்கள் உள்ளப் பான்மைகளைச் சீரிய முறையில் திருத்துவது சைவ இளைஞர்களின் கடமையாகும்.

நண்பர்களே !

சித்தாந்தத்தோடு கலந்து நிற்கும் நமது தமிழ்மொழியோ, பரம்பொருளொப்பத் தோற்றம் தெரியவொண்ணாததாய், உலகத்தில் வழங்கும் மொழிகளுளெல்லாம் மிகவும் பழமை வாய்ந்ததாய், தன்னோடொத்த மொழிகளும், தனக்குப்பின் தோன்றிய மொழிகளும், மக்கள் உள்ள வளர்ச்சிக்கேற்ப வளரவாற்றாதனவாய் இறந்தொழியத் தான் ஒன்றுமே இறந்த காலப் புகழெல்லாம் தாங்கி எதிர்காலச் சீரெல்லாம் நோக்கி நிற்கும் பேரரசியென்னத் திகழ்கின்றது. இதன்கண் அமைந்துள்ள நுண்ணிய இலக்கண நூல்களும், பண்டைய மக்களின் வீரம், கொடை, உள்ள நெகிழ்ச்சி முதலியவற்றை விளக்கும் சங்க நூல்களும், மக்கள்கொண்டொழுகவல்ல நீதிகளைத் தெளிவுபடுத்திக் கூறும் நீதிநூல்களும், தெய்வமணங்கமழும், இறைவனைப்போற்றும் பாடல்களும் உண்மை தெரிக்கும் தத்துவநூல்களும் எண்ணிறந்தன. ஆன்றோர்கள் உளங்கசிந்துருகிப் பாடிய தேனூறும் பாக்களை யாம் பயிலுங்கால் உளவாகும் இன்பத்திற்கு இணை இவ்வுலகில் பிறிதொன்றில்லை. இணையாக ஒன்று கூறவிரும்பின் இறைவன் திருவடியின்பத்தையன்றிப் பிறிதெதனைக் கூறுவது. இது குறித்தே நமது கச்சியப்ப முனிவரும்,

"ஆயுந்தொறும் தொறும் இன்பம் தருங்கலை ஆங்கறிவு
மாயுந்தொறும் தொறும் இன்பம் தரும்வள்ளல் வார்கழல்கள்

எனக்கலையாராய்ச்சியின் இன்பத்தைப் புகழ்வாராயினர்.

நமது தமிழ்ப் பாக்களைப் பயிலுங்கால், அவற்றின் ஆற்றலால், நாம் நம்முடைய நிலையை அறவே மறந்து, அப்பாக்களால் கூறப்பெறும் நிலையில் நம்மையறியாமலே புகுந்து அவைகளோடு ஒன்றிவிடுவதைக் கண்கூடாகக் காணலாம்

இவ்வாறு பல பல பாக்களைப் பயிலுவதால் உள்ளம் பண்படைந்து சிறப்புறுகின்றது. எடுத்துக்காட்டாக ஆளுடைய பிள்ளையாரருளிய விடந்தீர்த்த பதிகத்தைப் பாருங்கள். கனவிசான்றாகமணம்செய்ய எண்ணித் தொடர்ந்துவந்தகாதலன் அரவு தீண்டியிறப்ப, ஓர் துணையுமின்றி ஏங்கியாற்றும் கற்புக்கரசியைக் கண்டு மனம் நெகிழ்ந்து பிள்ளையாரருளிய பாடல்களை, ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குப் பின்பு இன்று நாம் பாடுவோமானாலும் உள்ளம் நலிந்து கண்ணீர் பெருகுகின்றது. அச்சொற்களின் எளிமையை நோக்குங்கள்,

“ சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே ”

அக்கற்புடை மகள் அரற்றும் சொற்களைக் கூறுகின்றார்; அவள் விழுகின்ற செயலைக் குறிக்கின்றார்; இறைவனை விளிக்கின்றார்; ஈதும் முறையோ என வினவுகின்றார். இத்துணைதான் நம் உள்ளத்தே தோன்றும் வேறுபாடுகள் எத்தனை?

இவ்வாறே அருள்மயமாக நின்று ஆன்றோரருளிய பாக்களெல்லாம், நாம் அவற்றோடு கலந்து நிற்கும் சிறுபொழுதிலேனும் நம்மை அருள்மயமாக்கிவிடுகின்றன. தூயநிலையையடைகிறோம். இது குறித்தன்றோ திருவாசகத்தைப் பெரியோர் பலவாறு போற்றுகின்றனர்.

திருவாசகமிங் கொருகால் ஓதில்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
அன்ப ராகுநரின்றி
மன்பதை யுலகில் மற்றையரிலரே! என்பது இன்றும் உண்மையல்லவா?

நமது பண்டைய நூல்களிற் பல, இக்காலத்தும் புதுவது எனப் போற்றத் தக்கக் கருத்துக்கள் பலவற்றை தம்மகத்தே கொண்டுள்ளன. அவற்றையெல்லாம் யாம் ஆய்ந்து வெளிப்

படுத்த வேண்டுவதும் ஒரு கடமையாகும். இக்காலத்தில், பிற மொழிகளில் பெரிதும் பாராட்டிப் போற்றப் பெறும் சில இனிய பகுதிகள், நம் மொழியில் சீரிய முறையில் அமைவுற்றிருப்பது அனைவரும் கண்டு மகிழற்பாலதாகும். உலகத்தாரால் பெரிதும் போற்றப்படும் ஒரு இந்திய கவிஞர் இறைவனை வழுத்தும் ஓர் பாடலில் மிகவும் அழகாகக் கீழ்க்கண்ட வண்ணம் கூறியிருக்கின்றார்.

*தென்றலஞ் செல்வன் வாயில்நின் றிரப்ப,
தன் இனி இதழ்களுள் ஒன்றிரண் டுகுக்கும்
நறுமல ரேய்ப்ப நின்றதென் இளமை.
இளமைதன் இறுதி எய்திய காலை,
தானலாற் பிறபொருள் நல்குதற் கிலதாய்த்
தன்சுவைப் பொதியுடன் தானே தன்னை
நாயகன் வரவு நோக்கிநின் றளிக்கும்
நறுங்கனி யேய்ப்ப நின்றதென் வாழ்வே!

இதன் கண் கவிஞர் வாழ்க்கையின் இரண்டு நிலையை மலருக்கும், கனிக்கும் ஒப்பிட்டுக் கூறி யுள்ளது பெரிதும் இன்பம் பயப்பதேயாகும். இப்பாடலோடு நம் தாயுமானாரருளிய

“ விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான மீறாய்
அரும்பு மலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே”

என்னும் கண்ணியை ஒப்பிட்டு, பொருளை விரித்துப் பாருங்கள். நமது பெரியாரது பாடல்களெல்லாம் பிறமொழிகளில் வெளிவரின் எத்துணைச் சிறப்பாகப் போற்றப்பெறும் என்பதை எண்ணுங்கள்.

---

* My life when young was like a flower–a flower that loosens a petal or two from her abundance and never feels the loss when the spring breeze comes to beg at her door.

Now at the end of youth my life is like a fruit, having nothing to spare, and waiting to offer herself completely with her full burden of sweetness.

TAGORE, FRUIT GATHERING.

நமது மொழியில், பலதிறப் புலமையுடையாரும் கற்றின்புறத்தக்க நூல்கள் மலிந்துள்ளன. சொற்கள் அமைந்துள்ள முறையிலே இன்பம் பயக்கும் செய்யுள்கள் முதல் பொருட்பொலிவால் மெய்ப்பாடு தோற்றி வையகத்தில் வானகத்தை வரவழைக்கும் நூல்கள் வரை இங்கு காணலாம். பண்ணோடு பாடவல்ல இசைப் பாடலகள் பல எங்கெங்கோ ஒலியும் ஒளியும் கரந்து மறைந்து கொண்டிருக்கின்றன.

## செந்தமிழ்ச் செல்வர்காள் !

நீவிர் அனைவரும் செந்தமிழ்த்தாய்க்கு ஆற்றவேண்டிய தொண்டுகள் பலவுள. முதற்கண், நமது நாட்டிலேயே, நம்மவர்களே தமிழ்மொழியைப் பயிலும் வண்ணம் நீவிர் முயற்சிக்க வேண்டும். நமது மொழியிலுள்ள அரிய நூற் கருத்துக்களையெல்லாம் பிறநாட்டாரும் தெரிந்துகொள்ளும் வண்ணமும் பிறமொழியிலுள்ள அரிய நூற்கருத்துக்களை நம்மொழியிலே தெரிந்து கொள்ளும் வண்ணமும் மொழி பெயர்ப்புக்கள் பல செய்தல்வேண்டும். அரிய தமிழ்ப் பாக்களையும் காப்பியங்களையும் படித்து இன்புறுவதையே பொழுது போக்காக நம் ஓய்வுக் காலங்களிற் கொண்டு அதன் பெருமைகளைப் பிறர்க்கறிவித்து அவர்களும் இத்தகைய பொழுதுபோக்கில் ஈடுபடுமாறு செய்தல்வேண்டும். இதனால் அடையக் கூடிய நன்மைகள் பல. வெளிவாராது பரண்களில் தூங்கும் சுவடிகளையெல்லாம் இறந்துபடாது உலகில் உலவுமாறு செய்தல் வேண்டும்.

சைவ இளைஞர்காள்! நமது நாட்டில் மலிந்து கிடக்கும் கோயில்களைப்பற்றி எப்பொழுதேனும் சிந்தித்திருக்கின்றீர்களா? குறிகளாலும் அடையாளங்களாலும் நம்மை ஆட்கொள்ளவேண்டி இறைவனணையில் எழுந்தவை அவையென்பதை நீவிர் கருதியதுண்டா? இற்றைய வசதிகள் ஒன்று மற்ற அற்றை நாட்களில் நமது முன்னோர் கருங்கல் என்பது காணக் கூடாத, மருத நிலங்களிலெல்லாம் மலைகள் எழுந்தனவொப்ப எடுத்திருக்கும் தளிகளைக் காணும்தொறும் காணும்தொறும் அவர்கள் உள்ளப்பான்மையும் உறுவலியும் உங்கள் உள்ளத்திற்

ரென்றி உட்கும் காரணமும் விளக்க வில்லையா? இக்கோயில்கள் பலவும் நமது பண்டைய பெருமையையும், தமக்கென ஒன்றும் போற்றாது பிறர்க்கென வாழ்ந்த பெரியாரது சிறப்பையும், குறிகளால் நமது தத்துவங்களை விளக்கி அறியாதாரும் அறியக் காட்டிய நன்மையையும், சிற்பவன்மையையும் நமக்குப் பல காலும் நினைவூட்டி நிற்கின்றன. இத்தஞ்சைமாநகர்க்கண், மண்ணவர் விண்காண ஏறும் ஏணி ஒப்பவும், வானமென்னும் நீலக்கவிகையின் காம்பெனவும், இராசராசச் சோழரின் உள்ளத்தே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்ததோர் இறைவன் உருவெனவும் ஓங்கிநிற்கும் பெருங்கோயிலைப் பாருங்கள். அதன் கண் நுண்ணிய வேலைக்கு இடந்தராத கருங்கற்களைத் துணைக் கொண்டு நமது முன்னோர் உள்ளக்குறிப்புக்களை வெளிக்காட்டும் உருவங்கள் பல அமைத்திருத்தல் எத்துணை வியப்பைத் தருகின்றது? இச்சிறப்பெல்லாம் போற்றாது, இவைகளைப் புறக்கணித்து, அவைகள் தாமே காலவாற்றலால் அழியுமாறு விடுதல் நமக்குப் பொருந்துமா? இளைஞர்களாகிய நீவிர் இக்கோயில்களின் நுட்பங்களையும் பெருமைகளையும் யாவரும் போற்றும் வண்ணம், உங்கள் உங்கள் செயலுக்கேற்ற சிறு திருத்தொண்டுகளேனும் செய்ய வேண்டாமா?

உண்மையன்பர்களே!

" காலையும் மாலையும் கால்பெயர்த்திடுவதுன்
ஆலயம் வலம் வருவதற்கே சால்பினில்
கைகொடுகுயிற்றுவது ஐயநின்னது
கோயில் பல்பணிகுறித்தே "

என்னும் ஆன்றோர் வாக்கைப் பின்பற்றி, நீவிர் அனைவரும் உங்களுக்கு அருகிலமைந்துள்ள கோயில்களுக்கு நாடோறும் சென்று இறைவனை வழிபட்டு வாழ்வது இன்றியமையாததாகும். நம்முட் சிற்சிலர் ஒன்றுகூடி ஒரு சிறு கூட்டமாகச் சேர்ந்து பழுதாயிருக்கும் கோயில்களுக்குச்சென்று பண்டைய அமைப்பு மாறாவண்ணம் ஏற்ற திருப்பணிகள் பலவும் செய்யலாம். பழங்கோயில்களுள் மறைந்துகிடக்கும் கல்வெட்டுக்கள்

பலவும், நமது நாட்டின் வரலாற்றிற்குப் பெரிதும் வேண்டப் பெறுவதாகலானும், ஏனைய வழிகளால் அறிந்து கோடற் கியலாத பல சமய உண்மைகளும், இலக்கிய மறைபொருள் களும், வாழ்க்கைமுறை நாட்டின் பிரிவு முதலிய குறித்த செய்திகளும், பிறவும் அவைகளிடையே தெளிவாகக் காணப் பெறலானும், சைவ இளைஞர் அவற்றைப் பொன்னே போற் போற்றித் திரட்டி வைத்துக்கொள்ளவேண்டும். பழங்கோயில் களிற் சிதைந்து கிடக்கும் பிறர்க்குப் பயன்படா கருங் கல் களும், கற்சல்லிகளும்கூட நம்மால் போற்றத்தக்கனவாகும் ஆங்காங்கு கிடைக்கும் கற்றூண்கள், சிற்பம்சிறந்த சிறு கற்கள் முதலியவற்றைத் தேடி எடுத்து ஒரு பொது இடத்தில் கண்காட்சியாகக் கூட்டிவைத்தல் வேண்டும். அவைகளை யாம் காணுந்தோறும், அவைகளோடு தொடர்புடைய நம் முன் னோர்களது அருஞ்செயல்களெல்லாம் நம் நினைவிற்கு வந்து நம்மை ஊக்கவுங்கூடும். நமது சைவப் பெரியார்களது உருவச்சிலை அமைந்துள்ளவிடங்களை யெல்லாம் தேடிச்சென்று அவைகளுக்குப் படி எடுத்துக்கொள்ளவேண்டும். திருக் கோயில்கள் பலவற்றின் அமைப்புக்களையும், ஒன்றற்கொன் றுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் நன்கு தெரிந்து, சிறப் பியல்களைத் தெரிந்து வெளியிடல் வேண்டும். பாடல்சால் பதிகளிலெல்லாம், அப்பதிகளுக்குரிய பாடல்களை யும் பலரும் பயிலும் வண்ணம் உதவிபுரிதல் வேண்டும். இத்தகைய தொண்டுகள் பலவுளவாகலின், அவரவர் தகுதிக்கேற்ப ஆவன செய்வீர்களாக.

நண்பர்களே!

சமயமும், தத்துவமும் எத்தகைய சிறந்த கொள்கைகளை உடையவேனும், அவற்றைச் சார்ந்தார் அக்கொள்கைகளைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றுகிற அளவிற்கும், முறைக்கும் ஏற்பவே உயர்வு தாழ்வுகள் ஏற்படுகின்றமையின், நாம் நம் சமயத்திற்குச் செய்யவேண்டிய சிறந்த தொண்டாகக்கொள்ள வேண்டியது நம் நிலைக்கேற்ப அக்கொள்கைகளை வாழ்க்கையிற் கொண்டு நடத்தலேயாகும். இறைபணி என்பது ஏதோ ஒரு

காலத்தில், எந்த ஒரு இடத்தில் ஆற்றலொடுதானமெனக் கருதாது, எக்காலத்திலும், நம்முடைய எச்செயல்களிலும், இடையீடின்றிக் கலந்து நிற்கும் என்றெனத் திண்ணமாக வுணர்ந்து அவ்வுணர்விற்கு நம்முடைய சிந்தை, செயல் சொல் முதலியவற்றை அடிமைப் படுத்திக் கொள்ளவேண்டும். அன்பும், அருளுமே நமது சமயத்தின் அடிப்படையென்ப தையும், அன்பு பெருகிய வழியே இறைவன் திருவருளுக் கிலக்காகுகின்றோம் என்பதையும், உயிர்களிடத்துக் காட்டும் அன்பெல்லாம் இறைவனிடத்துக் காட்டுவதே என்பதையும்,

"ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே" என்னும்

மணிவாசகத்தாலும்,

"அன்பைப் பெருக்கி என் ஆருயிரை ஆண்டுகொண்ட
இன்பப் பெருக்கே இறையே பராபரமே" என்னும்

தாயுமானவர் அருட்பாடலாலும்,

"ஈசனிடத் தன்புள்ளார் எவ்வுயிர்க்கும் அன்புள்ளார்"

என்னும் திருவாக்காலும் முறையே விளங்குவனவாகும்.

உண்மை அன்பரீர்!

இதுகாறும் நமது சமயம், தத்துவம், மொழி, கோயில் முதலியவற்றைப்பற்றி, யான் கூறிய சிலவற்றை, என் புன் சொற்கள் நோக்காது, பொருள்களின் பெருமை நோக்கிச் செவி சாய்த்துக் கேட்ட தங்களுக்கு என் உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்து, இவ்வாண்டில் இளைஞர்களாகிய யாம் செய்யவேண்டிய பணிகளைத் திட்டம் செய்யுமாறு தங்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றேன்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.